[1983 பிப்ரவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்கிறேன் அமைதியாக இருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஒழுங்குப் பிரச்னை கேட்க ஆரம்பத்திலே நான் கேட்டேன். ஆனால் நீங்கள் மறுத்துவிட்ட காரணத்தினால், இந்த ஒழுங்குப் பிரச்னை சம்பந்தமாக ஒரு தீர்ப்பு கிடைத்தால் போதும். நான் மேலே ஒழுங்குப் பிரச்னை கேட்பதற்கு தயாராகத் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் சொன்ன கருத்தைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள், வினா-விடை நேரம் முடிந்தவுடனே வந்து கேட்டிருந்தால் எனக்கு ஆட்சே பணை கிடையாது. நான் ஏன் கடமை தவறி நடக்கிறேன்? எனக்குத் தனிப்பட்ட கோபதாபங்கள் ஏன் இருக்கின்றது? சபையை நடத்துவதற்கு எல்லோரும் தேர்ந்தெடுத்ததால்தான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். இல்லாவிட்டால் இதையும் விட்டு நான் பாட்டுக்குப் போய்விடுவேன். எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை. அரசியல் காலத்தையெல்லாம் முடித்துவிட்டுத்தான் நான் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். ஆதலால் எனக்கு யார் மீதும் வெறுப்போ, விருப்போ கிடையாது.

7. கவன ஈர்ப்பு

தூத்துக்குடி மாவட்ட தலைமை மருத்துவமனை அறுவை சிகிச்சை நிலையம் மூடப்பெற்றிருப்பது.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, "தூத்துக்குடியிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலுள்ள அறுவைசிகிச்சை நிலையம் கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெடனஸ் கிருமிகள் பரவி இருக்கிறது என்பதற்காக 2—11—1982 முதல் மாவட்ட தலைமை மருத்துவமனை, தூத்துக்குடியில் அறுவை அரங்கு மூடப்பட்டு இருக்கிறது. டெடனஸ்கிருமிகள் உள்ளதா என்பதை கண்டறிய இரண்டு முறை சுவாப் எடுக்கப்பட்டு ஆராய்ந்ததில் அவைகள் காணப்படவில்லை. மூன்றாவதாக ஆராய்ந்ததில் கிருமிகள் வளர்ந்திருப்பது தெரியவந்தது. மேலும் அறுவை அரங்கில் ஜெனரேட்டர் பொருத்துவதற்கான கட்டிட வேலை நடந்து கொண்டு வருகிறது. இந்தக் காரணத்தினாலே

அறுவை அரங்கு செயல்படவில்லை. இருந்தபோதிலும் அவசர அறுவை சிகிச்சைகள் போஸ்ட்பார்டம் அரங்கில் நடைபெற்று வருகிறது. அறுவை சிகிச்சை செய்வதற்காக தேர்வு செய்யப் பட்டு நிச்சயிக்கப்பட்ட நோயாளிகள் அருகாமையிலுள்ள, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

[முற்பகல் 10-40]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும் பொழுது இப்பொழுது அங்கே ஒரு பகுதியில் அறுவை சிகிச்சை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஏறத்தாழ இன்றைக்கு மூன்று மாத காலம் ஆகிவிட்டது. இது மாவட்டத் தலைமை மருத்துவமனை. ஜெனரேட்டர் பொருத்துவதற்கான புதிய கட்டிடம் கட்டப்படுவதாகச் சொன்னார்கள். இதைக் காலதாமதப்படுத்தாமல், உடனடியாக அந்த ஆப்பரேஷன் தியேட்டரைப் பழுதுபார்த்து அறுவை சிகிச்சை நடத்துவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, காலதாமதம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், இந்தவொரு வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொண்டு ஜெனரேட்டர் பொருத்தக்கூடிய இந்த நேரத்திலேயே இரண்டு வேலைகளையும் செய்துகொண்டிருக்கிறோம். ஆப்பரேஷன் தியேட்டர் இயங்க ஆரம்பித்த பிறகு ஜெனரேட்டருக்காக மேலும் மூன்று மாதங்கள் முடக்கூடாது என்பதற்காகத்தான், காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒரே நேரத்தில் இந்த இரண்டு வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறோம். இதன் விளைவாக நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்பியபடி அந்தக் காலதாமதம் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அறுவை சிகிச்சை நிலையத்தில் இறுதியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஒரு நோயாளி மரணம் அடைந்து இருக்கிறார். அவர்கள் வாழ்க்கையில் மிகவும் பின் தங்கியவர். அவர் மரணம் அடைந்ததற்குக் காரணமே அந்தக் கருவிகளில் உள்ள குறைபாடுதான் என்று சொல்லப்படுகிறது. இறந்த அந்த நபரின் குடும்பத்திற்கு அரசு உதவித்தொகை வழங்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 பிப்ரவரி 11

*திரு. சோ. அழகர்சாமி ; பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய சபையின் விதிகளின்படி 54-வது விதியின்கீழ் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். வழக்கமாக இதற்கான பதிலை விவர அறிக்கையாக வைப்பது வழக்கம் ஆனால் இன்றைக்கு அம்மாதிரி எழுத்து பூர்வமான அறிக்கையை வைக்கவில்லையே, அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் பல்லாண்டுகளாக சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய இனிய என் உடன்பிறப்பு சட்டத்தில் உள்ள விதிகளை நான் மனப்பாடம் செய்து வைத்துத்தான் இருக்கிறேன். விதிகள் என்றால் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் வந்தவுடனே, உடனடியாக நாம் பதிலை அளிப்பது. அந்தப் பதில் நீண்ட பதிலாக இருந்தால் பேரவைத் தலைவர் அவர்கள் நம்முடைய அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கருதி அறிக்கையாக வைத்து விடுங்கள் என்று சொல்வது வழக்கம், ஆனால், இது சுருக்கமாக இருக்கிறது. ஆகவே, சுருக்கமாக இருக்கக்கூடிய இந்த பதிலைக் கூட இங்கே அறிக்கையாக வைப்பது நியாயமாக இருக்காது. நீங்கள் என்ன வற்புறுத்த வேண்டுமென்றால், அவையிலே படிக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் நன்றாக இருக்கும். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அந்த முறையில்தான் வாதாடிக் கொண்டிருந்து இருக்கிறோம். எனவே, அவையிலே எந்த விதிகளையும் மீறவில்லை. இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான், நிதானமாக, ஒழுங்காகப் படித்து, ஒவ்வொருவருக்கும் கருத்து மனத்தில் பதிய வேண்டுமென்பதற்காக நிறுத்திப் படித்தேன். நிச்சயமாக அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துணைக் கேள்வி கேட்டபொழுது நிச்சயமாக இதைப் புரிந்து கொண்டுதான் கேட்டிருக்கிறார்கள் என்பது நம்முடைய அவைக்கும் தெரியும். ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இருப்பதாகத் தெரியவில்லை,

8. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. பி இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத் துறையில் மதிப்பீட்டுக் குழுத் தலைவன் என்ற முறையில், பாசனத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பதினைந்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை' பேரவைக்கு அளிக்கிறேன்.